அமைத்து, அவர் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று தீப்பெட்டிக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகளுக்கு நல்ல சந்தைகளைப் பார்த்து ஏற்பாடு செய்கிறார்கள்.

THIRU K.S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries whether the hand-made match manufacturing factory at Hosur is working properly and what amount of financial aid the Government are giving to it?

THE HON. THIRU S. MADHAVAN : The hon. Member may put a separate question.

Co-operative Tea Factories

* 230 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Co-operative Tea Factories in the State have earned profits during 1970-71;

(b) if so, the details thereof; and

(c) the steps taken to maintain the earning capacities of the factories ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) எட்டு தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், 1970-71-ல் ரூ. 6,35,437 லாபம் பெற்றுள்ளன.

(உ) நல்ல உரம் சேர்த்து தேயிலை நடுவதில் நவீன முறைகளைக் கையாளுவது, தேயிலைப் பொட்டலங்கள் செய்து அவைகளைச் சிறப்பு அங்காடிகள் மற்றும் இதர துறைகள் மூலமாக விற்பனை செய்வது, கூனூரில் தேயிலையை இருப்பு வைக்க கிடங்கு ஒன்று கட்டுவது, இவற்றிற்குத் தேவையான ஊழியர்களை நியமிப்பது ஆகிய நடவடிக்கைகள் மூலமாக தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் லாபத்தைக் கூட்டுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரியில் பொதுவாக எத்தனை தேயிலைக் கோவாபரேடிவ் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? எந்தெந்த இடங்களில் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இப்போது 8 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேலும் 2 தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சி செய்தோம். அதிலே மத்திய அரசு டீ போர்டு மூலமாகக் கொடுக்கும் கடனுக்கு வட்டி விதம் எப்படி என்ற பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதற்கு ஓரளவுக்குப் பரிகாரம் காணப்பட்டு, புதிய தொழிற்சாலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், இந்த கோவாபரேடிவ் துறையில் இருக்கும் தேயிலை உற்பத்தித் தொழிற்சாலையை இன்னும் அதிக லாபம் கிடைக்கும் அளவுக்கு, அதாவது தனியார் துறையில் இருப்பவர்கள் பெறும் லாபத்தைக் காட்டிலும் அதிகமாகப் பெறும் அளவுக்கு, விரிவு செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது இல்லை. சிறிய சிறிய அளவில் தேயிலை உற்பத்தி செய்யும் தோட்டச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய தேயிலையை பாக்டரிக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து லாபம் பெறவேண்டுமென்ற அடிப்படையில் துவங்கப்பட்டது. லாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ள முடியாது.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, நாம் தயாரிக்கும் தேயிலை, கேரள மாநிலத்தில்தான் சந்தை பிடித்துக்கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சந்தையை சென்னையில் ஆரம்பித்து, நல்லமுறையில் நடத்த முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தேயிலை உற்பத்தியாளர்களிடத்தில் நாம் கலந்து பேசிப்பார்த்தோம். இப்போது கொச்சின் சந்தைக்குத்தான் பெரும்பாலான தேயிலை கொண்டு செல்லப்படுகிறது. ஓரளவுக்கு விற்பனை வரிச் சலுகை கொடுத்தால் அந்தச் சந்தையை சென்னையில் நடத்தலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். உணவு-விற்பனை வரித் துறை அமைச்சர் அதற்காகக் கருணை காட்ட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு இந்தத் தேயிலைத் தொழில் ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்குப் போதுமான இடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு மத்திய அரசாங்கம் ஒரு குழு அமைத்து இருக்கிறது. அந்தக் குழுவினிடத்தில் அரசாங்கம் இந்தச் சிபார்சுகளைச் செய்து இருக்கிறது. எங்கெங்கே காட்டிலாக்கா நிலங்கள் இருக்கின்றனவோ அங்கே தேயிலைத் தோட்டங்கள் ஆரம்பிப்பதற்கு ஏராளமான பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தேயிலையின் தரம் வேறு கம்பெனிகளில் தயாரிக்கும் தரத்திற்குக் குறைவாக இருக்கிறது. அதனால் வெளி மார்க்கெட் கிடைப்பது இல்லை. அந்தத் தரத்திற்கு நம்முடைய தரம் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் அறிந்தவரை அவர்கள் நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நான் அறிந்தது, மற்றவர்களோடு போட்டா போட்டி இருக்கவேண்டும். கடந்த வருஷம் 6 லட்சம் ரூபாய் அவர்கள் லாபம் சம்பாதித்து இருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே,, சமீப காலத்தில் பிரிட்டிஷ் ராயல் இன்ஸ்டிட்யூட் ஆப் ரிசர்ச் என்ற நிறுவனம், 'டீ ஹார்ட் அட்டாக்கைத் தடுத்து நிறுத்துகிறது' என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். இதை விளம்பரப்படுத்தி கோவாப்பரேடிவ் முறையில் அரசாங்கம் ஏரானமான டீ நிறுவனங்களை ஆரம்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் அதைக் கேட்டுப் பயப்படவேண்டாம்.